# சிறுபஞ்ச மூலம் உணர்த்தும் அறக்கருத்துக்கள்

**முனைவர் R. துரைச்செல்வி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
குயின்ஸ் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,
புனல்குளம்.

**ஆய்வுச் சுருக்கம்**
தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை முறையைப் படம் பிடித்துக் காட்டுவது சங்க இலக்கியங்கள் பதினெண் மேற்கணக்கு பதினெண் கீழ்கணக்கு என இரு பெரும் பிரிவாக பகுக்கப்பட்டுள்ளது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் அறம் சார்ந்த நூல்கள் பதினொன்றனுள் சிறுபஞ்சமூலமும் ஒன்று. தமிழர் மருத்துவத்தில் உடல்நோய்களைத் தீர்ப்பதற்குக் கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சில் ஆகிய ஐந்தின் வேர்களைச் சேர்த்து மருந்தாக்குவது போல ஐந்து கருத்துக்கள் மூலம் நீதியைப் போதித்து ஒழுக்கம் தவறும் செயலுக்கு மருந்தாக அமைகிறது சிறுபஞ்சமூலம். இந்நூலின் ஆசிரியர் காரியாசன் ஆவார்.

**அறம் என்பதன் பொருள்**
அறம் என்பது ஒருவர் சமூகத்தில் எவ்வாறு நடக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. ஒழுக்க நெறிகள் எல்லாச் சமூகங்களிலும் ஒன்று போல் இருப்பதில்லை. காலம், நம்பிக்கைகள், பண்பாடு என்பவற்றைப் பொறுத்து மாறுபடுகின்றன அந்த வகையில் சிறுபஞ்சமூலம் பின்வரும் அறக்கருத்துக்களை விளக்குகிறது.

**கற்றோர் கல்லாதோர் நிலை**
அறிவுடைய நூல்களைக் கற்றவர் தேவரைப் போன்றவர். கல்லாதவர் பிசாசுகளைப் போன்றவர். 'அழகை மட்டும் பேணுபவர் இரு கால்கள் கொண்ட மாடுகளுக்குச் சமமாவர். கல்லாதவன் செய்யும் செயல்களை அறிவுடைய நல்லவர்கள் கேட்டால் சிரிப்பினை உண்டாக்குவதாக அமையும் என்கிறது சிறுபஞ்சமூலம்.

**நன்மை தீமை தரும் செயல்கள்**
மண வாழ்க்கை சிறியதாயினும் அவற்றினின்றும் மாறுபடாத குணங்களை உடையவர்க்கு சிறந்த நன்மை பயக்கும் கள்ளுண்ணல், கணவனைப் பிரிந்து வாழ்தல், பிறர்மனை செல்லுதல் போன்றவை தீய பெண்களின் செயல்கள் ஆகும் என்கிறார் காரியாசன்.

**நூலின் அழகும் வீரரின் அறமும்**
உடல் அழகை விட நூலின் அழகே சிறந்தது. ஆடையை விட்டவர். அஞ்சி ஓடுபவர், பற்று இல்லாதவர் போன்றோரை வீரர்கள் அணுக மாட்டார்கள் என்கிறது சிறுபஞ்சமூலம்.

**அரசன், அமைச்சன், உழவன் நிலை**
குடியானவர்களின் உயர்வே அரசனின் உயர்வு. அரசனைப் போல பகுத்தறியும் ஆற்றலை உடையவன் அமைச்சன். நிலத்தை உழுது பண்படுத்தி உழவுத்தொழிலை செய்பவனே உழவுத் தொழிலாளன் என்கிறார் சிறுபஞ்சமூல ஆசிரியர்.

**இறைவனாதல், வீடுபேறடைதல்,இல்லற வாழ்வு, பேரறம்.**
தன்னை சார்ந்தவர் பழியாத வண்ணம் வாழ்பவன் இறைவனாவான். இன்சொல் பேசி பிறருக்கு கேடு நினைக்காதவன் வீடு பேறடைவான். முற்பிறப்பின் செயல்

மறுபிறப்பின் இல்வாழ்க்கைக்கு அறம் சேர்க்கும். பேணிப் பாதுகாத்தல் பேரறம் என்கிறது சிறுபஞ்சமூலம்.

தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை முறையைப் படம்பிடித்துக் காட்டுவது சங்க இலக்கியங்களாகும். பண்டைய தமிழர்களின் காதல், போர், வீரம், ஆட்சியமைப்பு, வணிகம் போன்ற நிகழ்வுகளை சங்க இலக்கியப் பாடல்கள் அறியத் தருகின்றன. சங்க இலக்கியங்களுள் பதினெண் மேற்கணக்கு நூல்கள் பதினெண் கீழ்கணக்கு நூல்கள் என பகுக்கப்பட்டுள்ளது. பதினெண் கீழ்கணக்கு நூல்களுள் அறம் சார்ந்த நூல்கள் 11, அகம் சார்ந்த நூல்கள் 6, புறம் சார்ந்த நூல் 1 என்று மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

அற நூல்கள் 1.திருக்குறள் 2.நாலடியார் 3.நான்மணிக்கடிகை 4.பழமொழிநானூறு 5.முதுமொழிக்காஞ்சி 6.திரிகடுகம் 7.இன்னாநாற்பது 8.இனியவைநாற்பது 9.சிறுபஞ்சமூலம் 10.ஏலாதி 11.ஆசாரக்கோவை. அகசார்ந்தநுல்கள் 1.ஐந்திணைஐம்பது 2.திணைமொழிஐம்பது 3.ஐந்திணைஎழுபது 4.திணைமாலைநூற்றைம்பது 5.கைந்நிலை 6.கார்நாற்பது புறநூல் 1.களவழிநாற்பது.

பதினெண் கீழ்கணக்கு நூல்களுள் ஒன்றான நீதி சார்ந்த பதினொரு நூல்களுள் ஒன்றாகத் திகழும் சிறுபஞ்ச மூலம் என்ற நூலில் எவ்வாறான அறக்கருத்துக்கள் பேசப்படுகின்றன என்பதை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பெயர்க்காரணம்**

பஞ்சம் என்றால் ஐந்து என்று பொருளாகும். மூலம் என்பதற்கு வேர் என்பது பொருளாகும். தமிழர் மருத்துவத்தில் உடல் நோய்களைத் தீர்ப்பதற்குக் கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சில் ஆகிய ஐந்தின் வேர்களைச் சேர்த்து மருந்தாக்குவது போல ஐந்து கருத்துக்கள் மூலம் நீதியைப் போதித்து ஒழுக்கம் தவறும் செயலுக்கு மருந்தாக அமைகிறது. இந்நூல் நான்கு அடிகளால் அமையப்பெற்றது. 100 பாடல்களைக் கொண்டுள்ளது. இதன் ஆசிரியர் காரியாசான் ஆவார்.

காரி என்பது இவரது இயற்பெயர். ஆசான் என்பது தொழிலின் அடிப்படையில் வந்த பெயர் எனலாம். இவர் மாக்காயன் என்பவருடைய மாணவர் “மழைக்கை மாக்காரி யாசான்” என்ற தொடர் நூலாசிரியர் கொடை வள்ளல் என்பதைப் புலப்படுத்துகிறது. இவரது காலம் நான்காம் நூற்றாண்டு ஆசிரியர் கொல்லாமையை வலியுறுத்தி கூறுவதால் (சிறுபஞ்மூலம் 51) அவர் சமண சமயத்தில் ஈடுபாடுடையவர் என்பது தெரிகிறது.

**அறம் என்பதன் பொருள்**

அறம் அல்லது ஒழுக்க நெறி (Morality) என்பது ஒருவர் சமூகத்தில் எவ்வாறு நடக்க வேண்டும் என்பது தொடர்பான பார்வைகளை குறிக்கிறது. எவை நல்லவை தீயவை என்பன தொடர்பில் ஒரு சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைகளின் தொகுப்பு எனலாம். ஒழுக்க நெறிகள் எல்லா சமுதாயங்களிலும் ஒன்றுபோல் இருப்பதில்லை. காலம், நம்பிக்கைகள், பண்பாடு என்பனவற்றை பொறுத்து இவை வேறுபடுகின்றன. ஒழுக்க நெறிகள் சமூகம், மெய்யியல், சமயம், தனிமனிதரின் மனசாட்சி போன்றவற்றால் வரையறுக்கப்படுகின்றன.

அந்த வகையில் தனது நான்காவது அதிகாரத்தில் அறத்தை பற்றி விவரித்துள்ளார்.அறம் என்பது ஒருவரிடம் இருக்கும் நல்ல பண்பை உணர்த்தும். அறத்தை பின்பற்றி வாழ்பவர்களின் வாழ்க்கை மேன்மையும், பெருமையும் அளவில்லாது கிடைக்கும் என்று கூறுகிறார்.

சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு. (திரு.அறன்.31) 1

அறமாவது சிறப்பைத் தரும்.செல்வத்தையும் தரும். அதனால் அறத்தை விட உயிருக்கு ஆக்கம் தருவது வேறு எதுவும் இல்ல என்கிறார்.

அந்த வகையில் சிறுபஞ்சமூலம் உணர்த்தும் அறக்கருத்துக்களை பின்வருமாறு காணலாம்.

**மக்களின் தீய குணங்களை நீக்கும் மருந்து**

**ஒத்த ஒழுக்கம் கொலைபொய் புலால்களவோடு**
**ஒத்த விளைவயல வோநாலிட்டு – ஒத்த**
**உறுபஞ்ச மூலந்தீர் போல் கூறீர்**
**சிறுபஞ்ச மூலஞ் சிறந்து – (சி.மூ 2)**

கொலை, பொய், புலால் களவோடொத்த இவையன்றி இவற்றுக்கு மறுதலையாகிய கொல்லாமை,உண்மை பேசுதல், புலால் மறுத்தல், கள்ளாமை என்று கொல்லப்பட்ட நாலோடு ஒழுக்கத்தையும் சேர்த்து இவ்வைந்தும் பஞ்சத்தைத் தீர்க்கும் மழைபோல மக்களின் தீய குணங்களை நீக்கும் மருந்து சிறுபஞ்சமூலம் என்கிறார்.

**கல்லாதவனின் நிலை**

**"கல்லாதான் தான்காணும் நுட்பமும் காதிரண்டும்**
**இல்லாதான் ஏக்கழுத்தஞ் செய்தலும் – இல்லாதான்**
**ஒல்லாப் பொருளில்லார்க்கு ஈத்தளியான் என்றலும்**
**நல்லர்கள் கேட்பின் நகை" (சி.மூ 5)**

கல்லாதவன் தானே ஆராய்ந்து காண்கின்ற நுட்பமான பொருளும், இரண்டு காதுகளும் இல்லாதவளாகிய ஒருத்தி தான் அழகுடையவள் என இறுமாப்புக் கொள்ளுதல், கையில் பொருள் இல்லாதவன் தன்னைப்போல் பொருளற்ற வறியவர்கட்கு அவர்களின் விருப்பம் தணிவதற்குப் பொருந்தாத பொருளைக் கொடுத்துத் தான் வறியவரிடத்து மிகவும் அருளையுடையவன் என்ற செயல்களை அறிவுடையவர்களாகிய நல்லவர்கள் கேட்டால் அவர்களுக்குச் சிரிப்பை உண்டாக்கும். கல்லாத மூடரின் செயல்களாக திரிகடுகம்

**கொல்லாது தானஞ்சான் வேண்டலும் கல்விக்கு**
**அகன்ற இனம்புகு வானும் இருந்து**
**விழுநிதி குன்றுவிப் பானும் இம்மூவர்**
**முழுமக்க ளாகற்பா லார். (திரி-பா-87) 2**

ஓர் உயிரைக் கொல்ல அஞ்சாது துணிந்து செய்பவனும், கல்வி கல்லாத இனத்துடன் புகுந்து கொள்பவனும்,முயற்சி எதுவும் செய்யாமல் முன்பு இருந்த பெரும் செல்வத்தை செலவு செய்து குறைப்பவனும் ஆகிய மூவரும் மூடர்கள் என்று திரிகடுகம் கூறுகிறது.

**கோல்வழி வாழ்தல் குணம்**

**"கொண்டான் வழியொழுகல் பெண்மகன் தந்தைக்குத்**
**தண்டான் வழியொழுகல் தன்கினை அ்.்.துண்டாதே**
**வேல்வழி வெம்முனை வீடாது மன்னாகு**
**கோல்வழி வாழ்தல் குணம்" - (சி.மூ. 15)**

இல்வாழ்க்கை ஏற்ற பெண் தன் கணவன் சொற்படி நடத்தல். மகன் தந்தையின் சொல் கேட்டு அவன்வழி பின்பற்றல், போர் மேற்சென்ற வீரர்கள் பகைவரோடு சேராமல் தன் அரசேனோடு வாழ்தல், குடிகள் அரசன் செங்கோல் முறைப்படி ஒழுகுதலும் நன்மையாகும். இதனையே இன்னாநாற்பது,

ISSN: 2320-4842
Vol-17 No. 04 October-December 2023

கொடுங்கோல் செய்து கொலைத்தொழில் புரியும் அரசரது ஆட்சியின் கீழ் வாழ்வது துன்பம் தரும். அதிகமான நீர் நிரைந்த பகுதியை தெப்பம் இல்லாமல் கடந்து செல்வது துன்பம் தரும்.வன்மையான சொற்களைக் கூறுவோரது நட்பு துன்பம் தரும்.உயிர்கள் மனத்தடுமாற்றம் அடைந்து வாழ்வது துன்பம் தரும். இதனை,

**கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழந்த லின்னா**
**நெடுநீர் புணையின்றி நீந்துத லின்னா**
**கடுமொழி யாளர் தொடர்பின்னா வின்னா**
**தடுமாறி வாழ்த லுயிர்க்கு. (இன்னாநாற்பது பா- 3) 3**

என்று விளக்குகிறது.

**கற்றவர் தேவரைப் போன்றவர்**

**"தேவரே கற்றவர் கல்லாதார் தேருங்கால்**
**பூதரே முன்பொருள் செய்யாதார் – ஆதரே**
**துன்ப மிலேம்பண்டு யாமே வனப்புடையேம்**
**என்பார் இருகால் எருது" - (சி.மூ.20)**

அறிவு நூல்களைக் கற்றவர் தேவரைப் போன்றவராவர். கல்லாதவர் பிசாசுகளைப் போன்றவர். முதுமைப் பருவம் வருவதற்கு முன்பே பொருளைத் தேடி வைத்துக் கொள்ளாதவர் அறிவற்றவராவர். முன்பு நாம் செல்வம் உடையவராக இருந்ததனால் துன்பம் இல்லாது இருந்தோம். அழகுடையவர் என்பவர் இருகால் கொண்ட மாடுகளுக்குச் சமமாவர்.

**தீய பெண்களின் ஐந்து செயல்கள்**

**'கள்ளுண்டல் காணின் கணவன் பரிந்துறைதல்**
**வெள்கில ளாய்ப்பிற ரிற்சேறல் – உள்ளிப்**
**பிறர்களு மாராய்தல் தீப்பெண் இளமைத்**
**திறமதுதீப் பெண்ணின் தொழில்" (சி.மூ. பா. 25)**

கள்ளுண்ணல், ஆராய்ந்து பார்க்காது தன் கணவனைப் பிரிந்து வாழ்தல், நாணம் இல்லாது பிறர்மனைமேற் செல்லுதல், பிறர் செயலை எண்ணி மற்றவருடன் ஆராய்தல், தீய மகளிரொடு நட்பு கொள்ளுதல் ஆகிய ஐந்தும் தீய பெண்களின் செயல்கள் என்கிறார்.இதுபோன்றே,

**நல்லாரை நல்லவர் நாண் உவப்பர் அல்லாரை**
**அல்லார் உவப்பது கேடு.(நான்மணி பா- 54-3,4) 4**

என்று நான்மணிக்கடிகை, பெண்ணின் நற்பண்புகள், சிறப்புகள் போன்றவற்றை குறிப்பிட்டு இருப்பினும் தவறான நெறியில் ஒழுகும் பெண்டிரை தீய பெண்டீர் என்று குறிப்பிடுவதை அறிய முடிகிறது.

**குற்றம் இல்லாமல் ஒருவனும் இல்லை.**

**ஒருவன் அறிவானும் எல்லாம் யாதொன்றும்**
**ஒருவன் அறியா தவனும் ஒருவன்**
**குணடைங்கங் குற்றமில் லானாம் ஒருவனை**
**கணனடங்கிக் கற்றானும். இல். ( சி.மூ.31)**

எல்லாவற்றையும் அறிந்தவனும், யாதொன்றையும் அறியாதவனும் அடங்கல் இல்லா ஒருவனும், குறற்மில்லாத ஒருவனும் எல்லா நூல் தொகைகளும் ஒழியாமல் கற்றவனும் உலகத்தின் கண் இல்லை என்கிறார்.

**நூல்களின் சொல் அழகே அழகு**

**"மயிர்வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்**
**உகிர்வனப்பும் காதின் வனப்பும் - செயிர்தீர்ந்த**

ISSN: 2320-4842
Vol-17 No. 04 October-December 2023

**பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த**
**சொல்லின் வனப்பே வனப்பு" (சி.மூ. 37)**

தலைமுடியின் அழகும், மார்பின் அழகும், நகத்தின் அழகும், செவியின் அழகும், பல்லின் அழகும் ஆகிய ஐந்து அழகுகளும் அழகு ஆகாது. நூல்களில் மிகுந்துள்ள சொல்லின் அழகே சிறந்த அழகாகும்.

**நன்மை தரும் செயல்:**

பொய் சொல்லாதிருத்தல், தன்னுடைய முயற்சியினால் வரும் பொருள், பிற உயிர் வருந்தக் கொல்லாதிருத்தல், தான் விரும்பியவற்றை பலர் அறிய விரும்பாதிருத்தல், மேன்மைப்பட்டவர்ளுடைய மனமானது மணவாழ்க்கை சிறியதாயினும் மாறுபடாமை போன்ற குணங்கள் சிறந்த நன்மையைப் பயக்கும் என்கிறார்.

**பொய்யாமை நன்று பொருள்நன்று உயிர்நோவக்**
**கொல்லாமை நன்று கொழிக்குங்கால்- பல்லார்முன்**
**பேணாமை பேணுந் தகைய சிறிதெனினும்**
**மாணாமை மாண்டார் மனம்" (சி.மூ.பா-39)**

என்ற பாடல் நன்மைப் பற்றி உணர்த்துகின்றது.

**வீரர்க்குரிய அறம்**

தமக்கு அஞ்சி உடுத்திய ஆடையை போகவிட்டவர், புல்லினை பறித்து வாயில் போட்டவர். ஓடுகின்ற நீரில் புகுந்தவர். கைப்படையை விட்டவர், பற்று சிறிதும் இல்லாது நிலை தளர்ந்தவர் ஆகிய ஐவரையும் செம்மையான தன்மை உடைய வீரர்கள் அணுகமாட்டார்.

**"உடையிட்டார் புன்மேய்வார் ஓடுநீர் புக்கார்**
**படையிட்டார் பற்றேதும் இன்றி - நடையிட்டார்**
**இவ்வகை ஐவரையும் என்றும் அணுகாரே**
**செவ்வகைச் சேவகர் சென்று" (சி.மூ.பா-41)**

என்ற பாடல் சிறந்த வீரர்க்குரிய அறத்தைக் காட்டுகிறது.

**அரசன் உயர்வு:**

நீண்ட கூந்தலை உடைய பெண்ணே நாடு முழுவதும் வயல்களில் உள்ள வரப்பானது உயர்ந்திருக்கும், வரப்பு உயர்ந்திருப்பதால் நீர் நிலைத்து நிற்கும். நீர் மிகுந்து இருப்பதால் நெற்பயிரானது வளர்ச்சியடைந்திருக்கும். குடியானவர்கள் நெல் விளைச்சலை அதிகம் பெற்றதனால் செழிப்புடன் காணப்படுவார்கள். குடியானவர்களின் உயர்வால் நாட்டை ஆளும் அரசனும் உயர்வான். அத்தகைய சிறப்புடைய அரசனை இந்த உலகமானது ஓயாது சொல்லிக்கொண்டே இருக்கும் என்பதை,

**" வார்சான்ற கூந்தல், வரம்புயர வைகலும்**
**நீர்சான் றுயரவே நெல்லியருஞ்- சீர்சான்ற**
**தாவாக் குடியுயரத் தாங்களுஞ்சீர்க் கோவுயரும்**
**ஓவா துரைக்கும் உலகு" ( சி.மூ. பா. 46)**

என்ற பாடல் விளக்குகிறது.

**இறைவன் ஆவதற்கு உரியவன்**

எந்த உயிரையும் கொல்லாமை நன்மையாகும். கொலை செய்தல் தீமை உடையதாகும். எழுத்தைக் கற்றுக் கொள்ளாமை தீமை உடையது. பிறரிடம் கோபித்துக் கொல்லுதல் தீமையான செயல். தன்னைச் சேர்ந்தவரெல்லாம் பழிக்காத வழி வாழ்பவனே பலருக்கும் இறைவனாவதற்கு உரியவனாவான்.

**"கொல்லாமை நன்று கொலைதீ தெழுத்தினைக்**
**கல்லாமை தீது கதந்தீது - நல்லார்**
**மெழியாமை முன்னே முழுதுங் இளைஞர்**
**பழியாமை பல்லார் பதி" (சி.மூ.பா.51)**

**அமைச்சன் என்பவன்**

தன்னுடைய நிலைமையினையும், தாழ்வு இல்லாததான் தொடங்கிச் செய்யும் விளையினது நிலைமையினையும், வலிமையினால் தன்னுடன் எதிர்த்த பகைவரின் இனிய நிலைமையினையும் , ஆராய்ந்து செய்பவன் அரசன். இவை நான்குமின்றி மற்றுமெல்லாம் பகுத்தறிவும், பெரிய ஆற்றலை உடையவன் அமைச்சனாவான்.

**" தன்னிலையுத் தாழாத் தொழினிலையுந் துப்பெதிர்ந்தார்**
**இன்னிலையும் ஈடில் இயல்நிலையுந் - துன்னி**
**அளந்தறிந்து செய்வா னரசமைச்சன் யாதும்**
**பிளந்தறியவும் பேராற்ற லான். (சி.மூ.பா. 58)**

**அமைச்சரின் துணிவு**

ஐம்பொறிகளின் அறிவும் தீய நெறியில் செல்லாது தம்மிடம் அடங்கி இருக்கும்படி நடத்தலும் ,அரசனுக்கு ஏற்படவுள்ள தீமையை முன்னர் அறிந்து தடுத்தலும் ,நாள்தோறும் தம் பகைமையை ஏற்றுக் கொள்வதற்குரிய மன்னரின் இருப்பை ஒற்றரால் அறிந்து அதற்கு ஏற்பச் செய்தலும்என்ற இம்மூன்றும் சிறப்புடைய அமைச்சரின் துணிவு என்பதை,

**ஐயறியும் தம்மை அடைய ஒழுகுதலும்**
**எய்துவது எய்தாமை முற்காத்தல் –வைகலும்**
**மாறேற்கும் மன்னர் நிலை அறிதல் இம்மூன்றும்**
**சீரேற்ற பேரமைச்சர் கோள் –(திரி-61) 5**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**உழவுத்தொழில்**

விளைநிலத்தில் சேர்ந்த வைக்கோலை உழுகின்ற மாடுகளுக்கு இட்டு, அம்மாடுகளால் புன்செய் நிலத்தை நன்செய் நிலமாக திருத்தி பண்படுத்தி உழவுத் தொழிலை செய்பவனே உழவுத் தொழிலாளன் என்று சொல்லுவர் உழவு நூலை நன்கு கற்றுணர்ந்தோர்.

**" நன்புலத்து வையடக்கு நாளுமா போபோற்றிப்**
**புன்கலத்தைச் செய்தெருப் போற்றியபின்- இன்புலத்தின்**
**பண்கலப்பை யென்றியை பாற்படும் - பானுழவோன்**
**நுண்கலப்பை நூலோது வார் ( சி.மூ.பா. 60)**

என்ற பாடல் விவசாயத்தின் மேன்மையை விளக்குகிறது.

**பெரிய அறம்**

ஈன்ற குழந்தையைப் பேணி வளர்க்கும் தாய், தான் கொண்ட சூலை வழியாது புறப்படுத்தல், வளர்ப்பில்லாத குழந்தையைக் கண்டெடுத்து வளர்த்தல் சூழ்கொண்ட

கன்னியையும் மிகவும் அழிந்தவனையும் தன் வீட்டில் வைத்துப் போற்றுதல் ஆகிய ஐந்தும் மிகப்பெரிய அறம் என்று பழைய நூலைக்கற்ற பெரியோர் கூறினார்கள்.

**" ஈன்றெடுத்தல் சூழ்புறஞ் செய்தல் குழவியை**
**ஏன்றெடுத்தல் சூலேற்ற கன்னியை - ஆன்ற**
**அழித்தாளை யில்வைத்தல் பேரறமா ஆற்ற**
**மொழிந்தார் முதுநூலார் முன்பு . ( சி.மூ.பா .72)**

**வீடுபேறடைதல்**

ஒருவன் பேசக்கூடிய இனிய சொற்களால் உறவு உண்டாகும். நற்குணம் இல்லாத வலிய சொல்லினால் வகையானது உண்டாகும். மெல்லிய சொல்லினால் பெருமையும் ஓய்தல் இல்லாத நிறைந்த இரக்கமும் உண்டாகும். அவ்விரக்கம் பொருந்திய நல்ல மனத்தினால் கேடு இல்லாத வீடு பேறு உண்டாகி விடும் என்பதை,

**"இன்சொலான் ஆகுங் கிளைமை இயல்பில்லா**
**வன்சொல்லின் ஆகும் பகைமைமன் – மென்சொல்லின்**
**ஒய்வில்லா ஆரருளாம் அவ்வருள் நன்மத்தான்**
**வீவில்லா வீடால் விடும்" (சி.மூ பா.90)**

என்ற பாடல் எடுத்தரைக்கிறது.

**இல்லற வாழ்வு**

மனைவியோடு கூடிவாழும் இல்வாழ்க்கை தழுவும் இல்லறம் துறவறமாகிய இரண்டில் நல்லதாகும். நன்கு பாராட்டப்படுமானால் நல்ல துறவறத்தாருக்குச் சமைத்துப் பகிர்ந்திட்டு தாமும் உண்டு.மிகவும் இனிதாக முற்பிறப்பில் வாழ்ந்தவர்களே. இப்பிறப்பில் சமைத்துண்டு இல்வாழ்க்கை மிகுதியாக வாழ்ந்திருப்பர் என்பதை,

**"புல்லறத்தி னன்று மனைவாழ்க்கை போற்றுடைத்தே**
**நல்லறத்தா ரோடு நடக்கலாம் – நல்லறத்தார்க்**
**கட்டிட்டுண் டாற்றவாழ்ந் தார்களே யிம்மையில்**
**அட்டிட்டுண் டாற்றவாழ் வார்." (சி.மூ.பா -93).**

என்ற பாடல் விளக்குகிறது.

**நிறைவுரை**

உலகில் பஞ்சத்தின் காரணமாக ஏற்படும் விளைவின்மையை மழை போக்குகிறது. அதுபோல உடலுக்கு ஏற்பட்ட நோயைச் சிறுபஞ்சமூலம் என்ற மருந்து நீக்குகிறது. அவ்வாறே உயிரைப் பற்றிய பிணிகளைச் சிறுபஞ்சமூலம் அழகாக விளக்குகிறது. அறமும் அறச்செயல்களின் சிறப்பும் இந்நூலில் பேசப்படுகின்றன. அறிவுடையார் செயல்கள் அறிவற்றோர் செயல்கள் பகுத்துரைக்கப்படுகின்றன. எது அழகு என்பது சுட்டப்பட்டுள்ளது. அரசர், அமைச்சர், தலைவன் , உழவர் ஆகியோர் இயல்புகள் வரையறுத்துள்ளார் காரியாசான் நன்மை,தீமை இல்வாழ்க்கையின் சிறப்பு, வீடுபேறு அடைதல், அறத்தின் மேன்மையும் விளக்கப்பட்டுள்ளது.

சான்றெண் விளக்கம்

1. பதினெண்கீழ்க்கணக்குநூல்சிறுபஞ்சமூலமும்உரையும்,காரியாசான் , பா -2.
2. பதினெண்கீழ்க்கணக்குநூல்சிறுபஞ்சமூலமும்உரையும்,காரியாசான் , பா -5.
3. பதினெண்கீழ்க்கணக்குநூல்சிறுபஞ்சமூலமும்உரையும்,காரியாசான், பா -15.
4. பதினெண்கீழ்க்கணக்குநூல்சிறுபஞ்சமூலமும்உரையும்,காரியாசான், பா -20 .
5. பதினெண்கீழ்க்கணக்குநூல்சிறுபஞ்சமூலமும்உரையும்,காரியாசான் , பா -31 .
6. பதினெண்கீழ்க்கணக்குநூல்சிறுபஞ்சமூலமும்உரையும்,காரியாசான் , பா -37.
7. பதினெண்கீழ்க்கணக்குநூல்சிறுபஞ்சமூலமும்உரையும்,காரியாசான் , பா -39.
8. பதினெண்கீழ்க்கணக்குநூல்சிறுபஞ்சமூலமும்உரையும்,காரியாசான் , பா -41.

9. பதினெண்கீழ்க்கணக்குநூல்சிறுபஞ்சமூலமும்உரையும்,காரியாசான், பா -46.
10. பதினெண்கீழ்க்கணக்குநூல்சிறுபஞ்சமூலமும்உரையும்,காரியாசான், பா -51.
11. பதினெண்கீழ்க்கணக்குநூல்சிறுபஞ்சமூலமும்உரையும்,காரியாசான், பா -58 .
12. பதினெண்கீழ்க்கணக்குநூல்சிறுபஞ்சமூலமும்உரையும்,காரியாசான், பா -60 .
13. பதினெண்கீழ்க்கணக்குநூல்சிறுபஞ்சமூலமும்உரையும்,காரியாசான், பா -72 .
14. பதினெண்கீழ்க்கணக்குநூல்சிறுபஞ்சமூலமும்உரையும்,காரியாசான், பா -90 .
15. பதினெண்கீழ்க்கணக்குநூல்சிறுபஞ்சமூலமும்உரையும்,காரியாசான் ,பா -93.

அடிக்குறிப்பு

1. திருக்குறள்,புலியூர்க்கேசியன் பதிய உரை அறன் வலியுறுத்தல் -31,
2. திரிகடுகம் மூலமும் உரையும் ,நல்லாதனார் உரை, ஆசிரியர் குழு, சாரதா பதிப்பகம்.
   பா-87.
3. இன்னா நாற்பது மூலமும் உரையும் ,ந.மு..வேங்கடசாமி நாட்டர் உரை,சாரதா பதிப்பகம்.
4. நான்மணிக்கடிகை பாட்டும் உரையும்,தமிழறிஞர் சாமி. சிதம்பரனார், சாரதா பதிப்பகம்.
5. திரிகடுகம் மூலமும் உரையும் ,நல்லாதனார் உரை, ஆசிரியர் குழு, சாரதா பதிப்பகம்.பா-42